முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**மகான் சூரிய பகவான் அருளிய மகா சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.11.2017, ஞாயிற்றுக்கிழமை

1. **கதிரவன் என் கருணை போலே**
**கருணா மூர்த்தியாக வந்த அரங்கனே**
**புதியதோர் ஞான உலகம் தன்னை**
**புண்ணியம் கொண்டே அமைக்க வந்த**

2. **வந்தநல் ஆறுமுக அரங்கனே**
**வள்ளலே ஞான மகா குருவே**
சிந்தைபட உன் தருமம் போற்றி
செப்பிடுவேன் **சூரியபகவானும்** மகா சூட்சும நூலை

3. நூலை **ஏவிளம்பி தேள் திங்கள்**
**நிலமதனில் சூல திகதி கதிர் வாரம்**
**(ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 3ம் நாள் 19.11.2017, ஞாயிற்றுக்கிழமை)**
ஞாலத்தார் நலமடைய உரைப்பேன்
ஞான தேசிகன் மூலம் ஆறுமுகனார்

4. ஆறுமுகனார் அற்புதம் நடத்த
அரங்கனை நம்பி வந்த மக்கள்
ஏறுமுகம் (உயர்வு நிலை) வாழ்வினில் அடைவர்
எதனாலும் கெடுதி நேரா காக்கப்படுவர்

5. காக்கவே **கருணைமிக கொண்டு**
**கலியுகத்தை தரும யுகமாக்கவே**
**ஆக்கமுடன் அன்னதானம் தனை**
**அறவழி முறைகளை எல்லா திக்கும்**

6. **எல்லா திக்கும் சேவையாக பரப்பிவர**
**ஏற்றுக் கொள்ளும் எல்லா தேசமும்**
**வல்லமை பெறும் வரலாறு படைக்கும்**
**வல்லரசாகவும் மாறி உலகத்தலைமை**

7. **தலைமை கொண்டு முருகப்பெருமான்**
**தயவில் பேராட்சி புரியும்**
**தலைமைமிகு மிகு சக்தியாக**
**தனிப்பெருங்கருணை சக்தியாக உள்ள**

8. **சக்தியாகவுள்ள அரங்க ஞானியின்**
சர்வ நெறி வழிமுறைகள் தன்னை
பக்தி கொண்டு ஏற்று வர
பரோபகாரம் சுத்தநெறி பரவி

9. பரவியே மக்களிடை நேர்மையும்
பாதகமில்லா உண்மை பணிவும்
துறவியை போல கட்டுப்பாடும்
தீகுணமில்லா நற்பண்புகளும் பெருகி

10. பெருகியே ஞானவான்கள் எனும்
பெருநிலையை மக்கள் அடைவர்
**முருகன் தயவால் கலியுகம்**
**முற்றிலுமாக முழுமையான பாதுகாப்பு பெறும்**

11. **காப்பு தரும் அரங்க ஞானியை**
**கதிர் வாரம் தரிசிக்கும் மக்களுக்கு**
**ஒப்பு கொண்டு சூரிய பகவானும் ஆசி தருவேன்**
**உயர்வு காண வழிவகை செய்வேன்** மகா சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சூரிய பகவான் அருளிய மகா சூட்சும நூலின் சாரம் :**

கதிரவனாம் சூரியபகவான் எனது கருணையை போலவே அளவிலாது வாரி வழங்கி கருணா மூர்த்தியாக வந்துதித்த அரங்கமகா தேசிகனே கலியுகம் மாற்றி ஞானஉலகம் தன்னை புண்ணிய பலம் கொண்டு அமைத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே வள்ளலே வள்ளல் மகா ஞானியே ஞானமகா குருவே அற்புதமான உமது பெருமைமிக்க தர்மத்தை போற்றியே உலகறிய உமது பெருமை கூறியே உலக நலம் கருதி ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 3ம் நாள் 19.11.2017, ஞாயிற்றுக்கிழமையான இன்றைய தினமதனிலே மகா சூட்சும நூல்தனையே சூரியபகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சூரியபகவான்.

கலியுக ஞானி உலகப்பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக முருகப்பெருமானும் உலகினில் அற்புதங்களை நடத்துகின்றார். முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை நம்பி வந்திட்ட மக்களெல்லாம் வாழ்வினில் உயர்நிலையை அடைந்து சிறப்படைவார்கள். எந்தவிதத்திலும் எதனாலும் துன்பமோ கெடுதியோ வராமல் காக்கப்படுவார்களப்பா.

கருணை மிகக்கொண்டு இக்கலியுகத்தை தர்ம யுகமாக்கவே உறுதியுடன் தவறாமல் அன்னதானம்தனை தானதரும நெறிகளை அறவழி முறைகளை எல்லா திசைகளிலும் தொண்டாக மக்களுக்கு செய்யும் பெரும் சேவையாக பரப்பி வர வேண்டும்.

அன்னதானத்தையும், அறவழிதனையும் ஏற்றுக் கொண்டு பின்பற்றும் எல்லா நாடுகளும் சர்வ வல்லமை பெறும், வரலாறு படைக்கும், அந்த தேசமெல்லாம் வல்லரசுகளாக ஆகி உலக தலைமை பொறுப்பினை வகித்து முருகப்பெருமானின் தலைமையை ஏற்று முருகப்பெருமானின் தயவினிலே பேராட்சி புரியுமப்பா.

**உலகின் ஞானத்தலைவனாக பெரும் சக்தியாக உலகத் தலைமையாக தனிப்பெரும் கருணை சக்தியாக உள்ள ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நலனிற்காகவும் ஞானம் பெறவும் உபதேசிக்கும் சர்வநெறிமுறைகளை வழிமுறைகள் தன்னை பக்தியோடு பணிந்து ஏற்று கடைப்பிடித்து வரவர, உலகமெலாம் பரோபகாரமாகிய ஜீவதயவு பெருகி தூய்மையான நெறி பரவி மக்களிடத்து நேர்மையும் உண்மையும் பணிவும் உண்டாகி துறவிகளை போல் கட்டுப்பாடுடன் வாழ்ந்து தீய குணங்கள் இல்லாது நற்பண்புகள் பெருகி ஞானவான்கள் எனும் பெருநிலைதனை மக்கள் அடைவார்கள்.**

**முருகப்பெருமானின் தயவினால் இக்கலியுகம் முற்றிலுமாக முழுமையான பாதுகாப்பை பெற்றிடுமப்பா.**

**அருள் பாதுகாப்பை உலகிற்கு தந்தருளும் அரங்கமகா தேசிக ஞானயோகியை கதிர் வாரமான ஞாயிற்றுக்கிழமைதனிலே தரிசனம் செய்யும் மக்களுக்கு சூரியபகவான் யானும் அரங்கனுடன் ஆசிதனை தந்தருள்வேன்** என தமது மகா சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் சூரிய கிரகாதிபதி மகான் சூரியபகவான்.

–சுபம்–